செ. கு. எண்: 019 நாள் : 12.01.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 12.1.2016

28.8.2015 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், நடமாடும் மதுவிலக்கு சோதனை சாவடியில் ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. V.கண்ணன்;

31.8.2015 அன்று திண்டுக்கல் மாவட்டம், இடையகோட்டை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. U.முருகேசன்;

3.9.2015 அன்று சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. K.சண்முகசிவா;

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையத்தில் மாநில நெடுஞ்சாலை ரோந்து பிரிவில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. T.சிவசங்கரன்;

4.9.2015 அன்று மதுரை மாவட்டம், மேலூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. ரவி பாண்டியன்;

சென்னை பெருநகர காவல், ஆவடி போக்குவரத்துப் பிரிவு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. K.கண்ணபிரான்;

5.9.2015 அன்று சேலம் மாநகரம், அம்மாபேட்டை காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. M.ஜெய்சங்கர்;

13.9.2015 அன்று சென்னை பெருநகர காவல், மாம்பலம் போக்குவரத்துப் பிரிவு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. K.குமார்;

18.9.2015 அன்று தேனி மாவட்டம், உத்தமபாளையம் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. சந்திரன்;

21.9.2015 அன்று தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் இருப்புப் பாதை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.ரமேஷ்குமார்;

22.9.2015 அன்று திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தெற்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. ராஜேந்திரன்;

25.9.2015 அன்று திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறில், தமிழ்நாடு சிறப்பு காவல் படை 9-ம் அணியில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.வெங்கட்ராமன்;

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணி புரிந்து வந்த திரு. S.ஆனந்தராஜ்;

27.9.2015 அன்று திருவாரூர் நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S. சந்திரமோகன்;

1.10.2015 அன்று தேனி மாவட்ட ஆயுதப் படை இரண்டாம் பிரிவில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. V.மதியழகன்;

5.10.2015 அன்று மதுரை நகரம், இருப்புப் பாதை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. G.வெங்கடேஸ்வரலு;

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. M.கந்தசாமி;

8.10.2015 அன்று ராமநாதபுரம் மாவட்டம், ஏர்வாடி தர்கா காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. கருணாமூர்த்தி;

–– ஆகியோர் உடல்நலக் குறைவால் காலமானார்கள் என்ற செய்தியையும்;

25.9.2015 அன்று விருதுநகர் மாவட்டம், கூமாபட்டி காவல் நிலையத்தில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. ஏழையின் செல்வம்;

30.9.2015 அன்று விழுப்புரம் மாவட்டம், மைலம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. R.ராமலிங்கம்;

4.10.2015 அன்று பெரம்பலூர் நகர காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. K.பெருமாள்;

14.10.2015 அன்று திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் கிளைச் சிறையில் இரண்டாம் நிலை காவலராகப் பணி புரிந்து வந்த திரு. N.சுரேஷ் குமார்;

–– ஆகியோர் சாலை விபத்துகளில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

5.10.2015 அன்று சென்னை பெருநகர காவல், அரசு பொது மருத்துவமனை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. P.முனுசாமி, ரயில் மோதியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட தேதிகளில், பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த இந்த **23** காவலர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**